செய்தி வெளியீடு எண்: 541 நாள்:27.08.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 26.8.2019 அன்று தலைமைச் செயலகத்தில், விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி வட்டம், தாமரை குளம் – பொட்டல் குளம் கிராமங்களுக்கு இடையே 102 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமம் மற்றும் புதிய தொழில் பூங்காவிற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

2015–ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், புதிய ஜவுளி பதனிடும் குழுமம் மற்றும் புதிய தொழில் பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசிற்கும், தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமத்திற்கும் இடையே கையெழுத்தானது.

அதன் தொடர்ச்சியாக, ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 151 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1.5 மெகா வாட்டிற்கு 6 எம்.எல்.டி திறன் கொண்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 1.5 மெகா வாட் திறன் கொண்ட கோ–ஜென் (Co-Gen) அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமம், தமிழ்நாடு அரசின் மூலம் மத்திய அரசிற்கு சமர்ப்பித்தது.

இத்திட்டத்திற்காக, மத்திய அரசின் 50 சதவிகித மானியம் மற்றும் தமிழ்நாடு அரசின் 25 சதவிகித மானியம் பெறுவதற்காக தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய ஜவுளி அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமம் மற்றும் புதிய தொழில் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம், சுமார் 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், சுமார் 2000 கோடி ரூபாய் வர்த்தகமும் நடைபெறவும் வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு.மு. கருணாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**